## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.54/2023

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தனம்மாள் | மதம் | : இந்து |
| க/பெ | : சுப்பிரமணி | ஜாதி | : -- |
| வயது | : 60 | கிராமம் | : பொன்பாடி |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**02.12.2025**

<u>வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லித்தான் வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் சரிதான். வழக்கில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் சரி என்றால் சரிதான். வழக்கு சொத்து மனை ஆதியில் ஆண்டாள், புஷ்பா, ஷியாமளா, நிர்மலா ஆகியோர் 1982ல் கூட்டாக கிரையம் வாங்கிய சொத்து என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆண்டாள், புஷ்பா, ஷியாமளா, நிர்மலா ஆகியோர் 1982ல் கூட்டாக கிரையம் வாங்கிய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளோம். அந்த ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்பது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு படிப்பறிவு இல்லை. எனவே தெரியாது. 1982ல் கூட்டாக கிரையம் வாங்கிய சொத்து என நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் எனவேதான் என்னால் ஆவணம் தாக்கல் செய்ய முடியவில்லை என்றாலும் சரியல்ல.

2. பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியும். எதிர்வழக்குரையில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து ஆண்டாள், புஷ்பா, ஷியாமளா, நிர்மலா ஆகியோருக்கு பாத்தியப்பட்ட சொத்தே இல்லை என்றாலும் ஆண்டாள், புஷ்பா, ஷியாமளா, நிர்மலா ஆகியோருக்கு ஆதியில் சொந்தம் என நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும்

சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 1 ஆவணத்தின் மூல பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் மூல பத்திரத்தை நான் கைவசம் வைத்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 1 ஆவணத்தின் மூல பத்திரம் என்னிடம் இல்லை என்றாலும் எனவேதான் என்னால் மூல ஆவணம் தாக்கல் செய்ய இயலவில்லை என்றாலும் சரியல்ல.

3. மகேந்திரன் தான் வாங்கிய சொத்து தவறானது என்பது தெரிந்துதான் பெயரளவிற்கான வா.சா.ஆ 2 அடமான ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளார் என்றால் சரியல்ல. மகேந்திரன் 2004 வரை பட்டா கூட வாங்காமல் பெயரளவிற்கான வா.சா.ஆ 2 அடமான ஆவணத்தை உற்பத்தி செய்து அதனடிப்படையில் 2004ல் கஜேந்திரன் என்பவருக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் சரியல்ல. கஜேந்திரன் 2012ல் வா.சா.ஆ 4 ன் மூலம் என் கணவருக்கு விற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2012 வரை கஜேந்திரன் பெயரில் பட்டா எதுவும் மாறவில்லை என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ 4 அவணத்திலேயே 16ம் பக்கத்தில் தனம்மாள் பெயரில் உள்ள பட்டாதான் இணைக்கப்பட்டுள்ளது என்றாலும் வா.சா.ஆ 4 ஆவணமே போலியானது என்றாலும் சரியல்ல. நான் போலியான ஆவணம் மூலம் பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேள் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)